# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2277/59 – 2022 අප්‍රේල් මස 29 වැනි සිකුරාදා – 2022.04.29

*2277/59 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**04 ஆவது திருத்தம்**

**இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவை பிரமாணக் குறிப்பு**

*பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 2014, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதிய மற்றும் 1883/17 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்புக்கமைய,*

**எம். ஏ. பி. தயா செனரத்,**
செயலாளர்,
*அரசாங்க சேவைகள் ஆணைக்குழு*

*2022, ஏப்பிறல் 27.*


1A – G36708 – 08 (2022/04)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பகுதி I

*திருத்த இலக்கம் 01 - 2016, ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய மற்றும் 1981/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*
*திருத்த இலக்கம் 02 - 2016, திசெம்பர் மாதம் 09 ஆந் திகதிய மற்றும் 1996/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*
*திருத்த இலக்கம் 03 - 2021, மார்ச்சு மாதம் 09 ஆந் திகதிய மற்றும் 2218/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

பகுதி II

விசேட தர மருத்துவ நிபுணர் /பல் மருத்துவர் தரத்திற்குப் பதவி உயர்வு பெற்றுக் கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் குறிப்பிடப்பட்டுள்ள பின்னிணைப்பு - I இல் தற்போது குறிப்பிடப்பட்டுள்ள நிபுணத்துவங்களுக்கு மேலதிகமாகப் புதிய சேர்க்கையாகப் பின்வரும் நிபுணத்துவங்கள் உள்ளடக்கப்படுகின்றன:

| | நிபுணத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் |
|---|---|---|
| 78. | மருத்துவ போசாக்கு | மருத்துவ போசாக்கில் மருத்துவக் கலாநிதி |
| 79. | முதியோர் மருத்துவம் | முதியோர் மருத்துவத்தில் மருத்துவக் கலாநிதி |
| 80. | விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மருத்துவம் | விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மருத்துவக் கலாநிதி |
| 81. | வயதுவந்தோர் இதயவியல் | மருத்துவக் கலாநிதிதி |
| 82. | நிர்ப்பீடணவியல் * | நிர்ப்பீடணவியலில் மருத்துவக் கலாநிதி |
| 83. | சமூக குழந்தை மருத்துவம் | குழந்தை மருத்துவத்தில் மருத்துவக் கலாநிதி |
| 84. | மூலக்கூற்று மருத்துவம் | ஆய்வுகூட மூலக்கூற்று மருத்துவத்தில் மருத்துவக் கலாநிதி |
| 85. | நரம்பு கதிரியக்கவியல் | கதிரியக்கவியலில் மருத்துவக் கலாநிதி |
| 86. | குழந்தை கதிரியக்கவியல் | கதிரியக்கவியலில் மருத்துவக் கலாநிதி |
| 87. | சுகாதாரத் தகவலியல் | சுகாதாரத் தகவலியலில் மருத்துவக் கலாநிதி |
| 88. | மருத்துவ ஒட்டுண்ணியியல் (முன்னர் ஒட்டுண்ணியியல் எனப்பட்டது) | மருத்துவ ஒட்டுண்ணியியலில் மருத்துவக் கலாநிதி |
| 89. | மருத்துவ நரம்பு உடற்றொழிலியல் (முன்னர் நரம்பு உடற்றொழிலியல் எனப்பட்டது) | மருத்துவக் கலாநிதி |
| 90. | புனர்வாழ்வு மருத்துவம் | மருத்துவக் கலாநிதி |
| 91. | குழந்தை மருத்துவம் (சிசு மற்றும் பிரசவத்திற்கு முன்பின்னான சிசு மருத்துவம்) முன்னர் குழந்தை சிசுவியல் மட்டும் | குழந்தை மருத்துவக் கலாநிதி |
| 92. | முதியோர் உள மருத்துவம் | உள மருத்துவத்தில் மருத்துவக் கலாநிதி |
| 93. | போதை உளவியல் மருத்துவம் | உள மருத்துவத்தில் மருத்துவக் கலாநிதி |
| 94. | ஒட்டறுவை மற்றும் சீரமைப்பு அறுவை சிகிச்சையியல் (முன்னர் சீரமைப்பு அறுவை சிகிச்சையியல் எனப்பட்டது) | அறுவை சிகிச்சையியலில் மருத்துவக் கலாநிதி |
| 95. | இரைப்பை குடல் சத்திர சிகிச்சையியல் (முன்னர் இரைப்பை குடல் அறுவை சிகிச்சையியல் எனப்பட்டது) | அறுவை சிகிச்சையியலில் மருத்துவக் கலாநிதி |
| 96. | குருதிப் புற்றுநோயியல் | மருத்துவப் புற்றுநோயியலில் மருத்துவக் கலாநிதி |
| 97. | குழந்தை மருத்துவப் புற்றுநோயியல் | மருத்துவப் புற்றுநோயியலில் மருத்துவக் கலாநிதி |
| 98. | உறுப்பு மாற்று சத்திர சிகிச்சையியல் | சத்திர சிகிச்சையியலில் மருத்துவக் கலாநிதி |
| 99. | குழந்தை மார்பு இருதய அறுவைச் சிகிச்சை | சத்திர சிகிச்சையியலில் மருத்துக் கலாநிதி |

*குறிப்பு*

I. விசேட தர மருத்துவ உத்தியோகத்தர் தரத்திற்குப் பதவியுயர்வினைப் பெற்றுக்கொள்வதன் பொருட்டு மேற்குறித்த I ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிபுணத்துவத்திற்குரிய அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் மற்றும் நிபுணத்துவத்திற்குரிய சபைச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

II. * வைரசியலில் மருத்துவக் கலாநிதி அல்லது மருத்துவ நுண்ணுயிரியலில் மருத்துவக் கலாநிதி பட்டத்துடன் நிர்ப்பீடணவியல் தொடர்பாக உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் கலாநிதிப் பட்டம் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஆகக் குறைந்தது ஒரு வருட பயிற்சியைப் பெற்றிருத்தலானது விசேட தரத்திற்குப் பதவியுயர்த்தும் போது கவனத்திற் கொள்ளப்படும்.

மருத்துவ உத்தியோகத்தர் /பல் மருத்துவ உத்தியோகத்தர் தரம் II இலிருந்து தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றுக்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் குறிப்பிடப்பட்டுள்ள பின்னிணைப்பு - II இல் தற்போது குறிப்பிடப்பட்டுள்ள நிபுணத்துவங்களுக்கு மேலதிகமாகப் புதிய சேர்க்கையாகப் பின்வரும் நிபுணத்துவங்கள் உள்ளடக்கப்படுகின்றன:

| | நிபுணத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் |
|---|---|---|
| 32. | மருத்துவக் கல்வி | மருத்துவக் கல்வியில் முதுகலைமானி |
| 33. | இராணுவ மருத்துவம் | இராணுவ மருத்துவத்தில் முதுகலைமானி |
| 34. | மருத்துவ மருந்தியல் மற்றும் நோய்த் தீர்ப்பியல் | மருத்துவ மருந்தியல் மற்றும் நோய்த் தீர்ப்பியலில் முதுகலைமானி |
| 35. | தடயவியல் மருத்துவம் | தடய மருத்துவத்தில் முதுகலைமானி |
| 36. | மருத்துவ நச்சியல் | மருத்துவ நச்சியலில் முதுகலைமானி |
| 37. | முதியோர் மருத்துவம் | முதியோர் மருத்துவத்தில் பட்டப்பின் படிப்புப் பட்டயம் (டிப்ளோமா) |
| 38. | நோய் தணிப்பு மருத்துவம் | நோய் தணிப்பு மருத்துவத்தில் பட்டப்பின் படிப்பு பட்டயம் (டிப்ளோமா) |
| 39. | மருத்துவ நச்சியல் | மருத்துவ நச்சியலில் பட்டப்பின் படிப்பு பட்டயம் (டிப்ளோமா) |

*குறிப்பு*

முதலாவது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கலாநிதிப் பட்டம் அல்லது வைத்தியக் கலாநிதிப் பட்டத்தின் (MD) முதலாம் பகுதிக்குரிய அல்லது இரண்டாம் பகுதிக்குரிய பரீட்சையை வெற்றிகரமாக நிறைவு செய்தலானது தரம் II இலிருந்து தரம் I இற்குப் பதவி உயர்வு பெறுவதற்கான அங்கீகரிக்கப்பட்ட தகைமையாகக் கருதப்படும்.

பிரதி மருத்துவ நிர்வாகத் தரத்திற்கு ஏற்புடைய பின்னிணைப்பு - III இல் தற்போது குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு மேலதிகமாகப் புதிய சேர்க்கையாகப் பின்வரும் பதவிகள் அவ் அட்டவணையில் உள்ளடக்கப்படுகின்றன:

| | நிறுவனம் | பதவி | நிறுவனங்களின் எண்ணிக்கை | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 49. | சுகாதார விடயத்தின் கீழ் காணப்படும் அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சுக்கள் | பிரதிப் பணிப்பாளர் | 01 | 01 |

சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்திற்கு ஏற்புடைய பின்னிணைப்பு - IV இல் தற்போது குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு மேலதிகமாகப் புதிய சேர்க்கையாகப் பின்வரும் பதவிகள் அவ் அட்டவணையில் உள்ளடக்கப்படுகின்றன:

| | நிறுவனம் | பதவி | நிறுவனங்களின் எண்ணிக்கை | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 59. | சுகாதார விடயத்தின் கீழ்க் காணப்படும் அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சுக்கள் | பணிப்பாளர் | 02 | 03 |
| 60. | சுகாதார விடயத்தின் கீழ்க் காணப்படும் அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சுக்கள் | சிரேஷ்ட உதவி செயலாளர் | 01 | 02 |

பிரதிப் பணிப்பாளர் நாயகத் தரத்திற்கு ஏற்புடைய பின்னிணைப்பு - V இல் தற்போது குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு மேலதிகமாகப் புதிய சேர்க்கையாகப் பின்வரும் பதவிகள் அவ் அட்டவணையில் உள்ளடக்கப்படுகின்றன:

| நிறுவனம் | பதவி | நிறுவனங்களின் எண்ணிக்கை | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சுகாதார விடயத்தின் கீழ்க் காணப்படும் அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சுக்கள் | மேலதிக செயலாளர் | 02 | 02 |

EOG 04-0214